DINAMALAR
National Tamil Daily

# மலக்குழி மரணங்களுக்கு நீதி கேட்டு பொது விசாரணை

பதிவு செய்த நாள்: ஜூலை 29,2023 01:32



கோவை: தமிழகத்தில் அதிகரித்து வரும் மலக்குழி மரணங்கள் தொடர்பாக நீதி கேட்டு, இளைஞர்களுக்கான சமூக விழிப்புணர்வு மையத்தினர், பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை சந்தித்து, பொது விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழகத்தில் கழிவு நீர் தொட்டிகளுக்குள் இறங்கி, விஷவாயு தாக்கி, உயிரிழந்த நிகழ்வுகள், துாய்மை பணியாளர்கள் மீதான வன்முறை உள்ளிட்ட, 34 விதமான சம்பவங்கள் தொடர்பாக, இளைஞர்களுக்கான சமூக விழிப்புணர்வு மையம் கள ஆய்வு செய்து வருகிறது. ஆய்வில், 43 பேர் மரணம் அடைந்திருப்பது தெரியவந்துள்ளது.

மலக்குழிகளால், 2022ம் ஆண்டில், 8 மாதங்களில் மட்டும், 15 பேர் இறந்திருக்கின்றனர். பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை சந்தித்து, பொது விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. இந்நிகழ்வு, கோவையில் உள்ள ஓட்டல் ஒன்றில் நேற்று நடந்தது.

**இதுதொடர்பாக, செயல் இயக்குனர் ரமேஷ் நாதன் கூறியதாவது:**

மலக்குழி மரணங்களை தடுக்கவும், மனித மலத்தை மனிதர்கள் கையால் அள்ளுவதை தடை செய்தும், மனிதக்கழிவுகளை அகற்ற பணியமர்த்தல் தடை மற்றும் மறுவாழ்வுக்கான சட்டம் 2013 கொண்டு வரப்பட்டது.

இச்சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய உள்ளாட்சி அமைப்புகள், காவல் மற்றும் வருவாய்த்துறையினர் அவட்சியமாக இருப்பதால், மலக்குழி மரணங்கள் தொடர்கின்றன.

34 சம்பவங்களில், கல் மட்டும் வழக்கு பதியப்பட்டு இருக்கிறது. 17 வழக்குகளில், 20 பேர் கைதாகி உள்ளனர் இவ்வழக்குகளில் முறையான விசாரணை நடக்கவில்லை. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து, கோர்ட்டில் வழக்கு நடக்கவில்லை. குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை.

சட்டத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும். நடைமுறைப்படுத்தாத அதிகாரிகள் மீது வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவுன் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மலக்குழி கழிவுகளை அகற்ற, இயந்திரங்களை பயன்படுத்த வேண்டும். இத்தொழிலில் இருந்து அருந்ததியின மக்களை விடுவித்து, சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான மறுவாழ்வு மற்றும் புதிய சிறப்பு திட்டங்களை உருவாக்க வேண்டும். இவ்வாறு, அவர் கூறினார்.

https://m.dinamalar.com/detail.php?id=3389088